செய்தி வெளியீடு எண். 107 நாள். 19.02.2018

# மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் ரூ.5 இலட்சத்தி 93 ஆயிரத்தி 616 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.02.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும், இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 102 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 47 மனுக்களும், சமூக நலத்திட்டம் 3 மனுக்களும், குடும்ப அட்டை 6 மனுக்களும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 4 மனுக்களும், வேலைவாய்ப்பு 33 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 9 மனுக்களும், சான்றிதழ் 1 மனுவும், இதரதுறை 40 மனுக்களும், பிறப்புச் சான்றிதழ் 1 மனுவும், அடிப்படை வசதி / போக்குவரத்து / சுகாதாரம் 8 மனுக்களும், ஊரக / நகர்ப்புற வளர்ச்சி 9 மனுக்களும் மற்றும் கடனுதவி 37 மனுக்களும் ஆக மொத்தம் 300 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இன்று முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பாக 6 நபர்களுக்கு திருமண உதவித்தொகை மற்றும் 4 நபர்களுக்கு கண் கண்ணாடிக்கான உதவித்தொகை என மொத்த ரூ. 1 இலட்சத்தி 31 ஆயிரத்தி 800 மதிப்பிலும், அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பாக தேசிய குழந்தை தொழிலாளர் ஒழிப்பு திட்டத்தில் ஏப்ரல் 2011 முதல் நவம்பர் 2011 வரை பணிபுரிந்த 6 பணியாளர்கள் (ம) தொண்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசு உயர்த்தி வழங்கிய நிலுவைத்தொகைக்கான காசோலைகளை ரூ.4 இலட்சத்தி 61 ஆயிரத்தி 816 மதிப்பிலும் ஆக மொத்தம் ரூ. 5 இலட்சத்தி 93 ஆயிரத்தி 616 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ர.சக்திவேல், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.சீ.ஜானகிராமன், கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு. நாராயணன், துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி. பிரீத்தி மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**